சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>MCOP.No.02/2023</u>

மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.2 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. J. சரஸ்வதி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திரு. சந்திரசேகரன் | த/பெ: கிட்டு | |
| வயது: | | ஊர் : | |
| தொழில்: | | முகவரி: | |
| தேதி: | 22.07.2025 | தாலுக்கா : | |

<u>முதல் விசாரணை...</u>

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு சம்பந்தமாக எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். நான் இந்த வழக்கில் விபத்து குறித்து புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னை காவல்நிலையத்தில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக பதியப்பட்ட குற்ற வழக்கில் நான் சாட்சியமளிக்கவில்லை என்றால் சரிதான். ராதிகா என்னை அழைத்ததன் பேரில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்தில் இரண்டு வாகனங்கள் மோதிக்கொண்டன. இரண்டு இருச்சக்கர வாகனங்கள் மோதிக்கொண்டது. இரண்டு வாகனத்தின் பெயர்கள் எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் ராதிகா கேட்டுக்கொண்டதால் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை அனுசரிப்பதாக சொன்னதன் பேரில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.